DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Principal Sessions Judge, Virudhunagar District at Srivilliputtur.

S.C.No.190/2022

Deposition of witness for Prosecution/Defence/Court : P.W.5

(Accused present)

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு.முத்துக்கிருஷ்ணன் | Caste | : |
| Father's Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the 10th day of December, 2024.

முதல் விசாரணை

நான் தற்போது செவல்பட்டி கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் கொத்தனார் வேலை பார்த்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். எனது சித்தியின் மூத்த மகள் பெயர் காயத்ரி, மற்றொரு மகள் வைதேகி, மகன் பெயர் அஜித்குமார் ஆகும். காயத்ரியும் ஆஜர் எதிரியும் பி எஸ் ஆர் கல்லூரியில் பணியாற்றியபோது, இருவரும் காதலித்து பெற்றோர்களால் நிச்சயிக்கப்பட்டு திருமணம் நடந்தது. அதன்பின்னர் காயத்ரி மேற்படி கல்லூரிக்கு வேலைக்கு செல்லவில்லை. பின்னர் காயத்ரி, திருவேங்கடத்தில் உள்ள கலைவாணி மெட்ரிக்குளேசன் பள்ளியில் டீச்சராக வேலை பார்த்து வந்தார். அவர் கர்ப்பமுற்றதிலிருந்து மேற்படி வேலைக்கு செல்லவில்லை. அவர்களுக்கு கோகுல்ரக்ஷன் என்ற ஒரு ஆண்குழந்தை பிறந்தது. காயத்ரி அவரது கணவர் பெற்றோருடன் கூட்டுக்குடும்பமாக வசித்து வந்தார். ஆஜர் எதிரி திருமணத்திற்கு பின்னர் எந்த ஒரு வேலைக்கு செல்லவில்லை. காயத்ரிக்கு அவர் பெற்றோர் கொடுத்த நகைகளை வைத்து செலவு செய்து வந்தார். மேற்படி

நகைகளை அடகு வைத்த பின்பு தான் இருவருக்கும் இடையில் பிரச்சினை ஏற்பட்டு வந்தது. பிர்ச்சினைகள் சம்மந்தமாக எனது சித்தப்பா வெள்ளைச்சாமி என்பவர் காயத்ரியின் வீட்டிற்கு சென்று பிரச்சினை குறித்து சமாதானம் பேசி வருவார். கடந்த 25.05.2022ம் தேதி மாலை 06.00 மணியளவில் நான் துலுக்கன்குறிச்சியில் வேலை முடிந்து விட்டு செவல்பட்டிக்கு இருசக்கரவாகனத்தில் போய்க் கொண்டிருந்தபோது, எனக்கு எதிரில் அஜித்குமாரும், ரமேஷும் ஒரு இருசக்கரவாகனத்தில் வந்தார்கள். நான் கையை காட்டி நிப்பாட்டினேன். அவர்கள் நிற்காமல் சென்றுவிட்டனர். பின்னர் நான் அவர்களுக்கு 2 முறை போன் செய்தும் போனை எடுக்கவில்லை. பின்னர் ஒரு அரை மணி நேரத்தில் ரமேஷ் என்பவர் எனக்கு போன் செய்து காயத்ரி மற்றும் அவரது குழந்தை கோகுல்ரக்க்ஷன் அவர்களது வீட்டின் மாடியில் இறந்துகிடந்ததாக தகவல் தெரிவித்தார். பின்னர் நான் அவர்கள் வீட்டிற்கு சென்றேன். அங்கு ஒரே கூட்டமாக இருந்தது. பின்னர் காயத்ரி இருக்கும் மாடிக்கு சென்று பார்த்தபோது, அங்கு காயத்ரியும், அவரது மகனும் இறந்த நிலையில் கிடந்தனர். காயத்ரியின் தலை கிழக்கு பக்கமும், கால் மேற்கு பக்கமும், வலது பக்க வாயில் ரத்தம் வந்து உறைந்த நிலையில் இருந்தது. அவரது மகன் கோகுல் ரக்க்ஷன் கட்டிலின் மேல்கிழக்கு பக்கதலையும், மேற்கு பக்க காலுமாக உறங்கிய நிலையில் இறந்து கிடந்தான். அங்கு அஜித்குமார், ரமேஷ் மற்றும் ஊர்காரர்கள் இருந்தார்கள். அங்கு ஆஜர் எதிரி இல்லை. ஆஜர் எதிரியின் குடும்பத்தார்களும் இல்லை. பின்னர் அஜித்குமாரிடம் நான், வெள்ளைச்சாமிக்கு தெரியுமா என்று கேட்டதற்கு அவர் தகவல் சொல்லிவிட்டதாக சொன்னார். பின்னர் 07.00 மணியளவில் காயத்ரியின் அப்பா வெள்ளைச்சாமி அங்கு வந்துவிட்டார். மேற்படி இறப்பில் சந்தேகம் இருந்ததால் நானும், என் சித்தப்பா வெள்ளைச்சாமியும் வெம்பக்கோட்டை காவல்நிலையத்திற்கு சென்று என் சித்தப்பா வெள்ளைச்சாமி புகார் அளித்தார். நான் அதில் சாட்சிக் கையொப்பம் செய்துள்ளேன். என்னிடம் காட்டப்படும்

புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். <u>புகாரில் உள்ள அறிவேன் சாட்சிக் கையொப்பம் அ.த.சா.ஆ.4</u> ஆகும். பின்னர் காயத்ரியையும், அவரது மகனையும் தனியார் ஆம்புலன்சில் விருதுநகர் அரசு மருத்துவமனைக்கு அஜித்குமாரும், ரமேசும் கொண்டு சென்றனர். நான் விசாரித்தபோது சுமார் 10 நாட்களுக்கு முன்பு காயத்ரியை, அவரது கணவரான ஆஜர் எதிரி அடித்து கொடுமை செய்தார் என்றும், காயத்ரி என்பவரை துர்க்கேஷ்வரி என்பவரின் வீட்டில் ஒரு நாள் தங்கியிருந்ததாகவும் தெரிவித்தார்கள். பின்னர் மறுநாள் 26.05.2022ம் தேதி காலையில் என் சித்தப்பா வெள்ளைச்சாமியும், நானும், அஜித்குமாரும், ரமேசும் விருதுநகர் அரசு மருத்துவமனைக்கு சென்றோம். அங்கு பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்த போது உடன் இருந்தோம். அங்கு வருவாய் கோட்டாட்சியர், காவல் ஆய்வாளர் ஆகியோர்கள் எங்களை விசாரித்தார்கள். பின்னர் பிரேத பரிசோதனை முடிந்த பின்னர் பிரேதங்களை அடக்கம் செய்ய கலிங்கப்பட்டி கொண்டு சென்றோம். கடந்த 08.06.2022ம் தேதி கிராம உதவியாளர், ஆஜர் எதிரியை காவல்நிலையத்திற்கு அழைத்துச் சென்றதாக என் சித்தப்பாவிற்கு தகவல் தெரிவித்தனர். எனது சித்தப்பா எங்களுக்கு தகவல் சொல்லி வெம்பக்கோட்டை காவல்நிலையத்திற்கு சென்றோம். அங்கு போலீஸார் விசாரித்தார்கள். இறந்த காயத்ரியின் சகோதரி வைதேகி என்பவருக்கு குழந்தை பிறந்ததை பார்க்க போவதற்காக கேட்டு சண்டைபோட்டதாகவும், அதற்கு ஆஜர் எதிரி மறுத்ததாகவும், இருவரையும் மூக்கையும், வாயையும் பொத்தி கொலை செய்ததாக ஆஜர் எதிரி சொன்னார். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பு குறுக்குவிசாரணை</u>

போலீஸார் ஆஜர் எதிரியை விசாரணை செய்யும் நான் வெளியில் தான் இருந்தேன். எதிரி, காயத்ரியின் நகைகளை அடகு வைத்து செலவு செய்த விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். காயத்ரி, ஆஜர் எதிரி கொடுமை செய்ததாக என்னிடம் நேரடியாக சொல்லவில்லை என்றால் சரிதான்,

என் சித்தப்பா சொல்லி தெரியும். எதிரியின் வீட்டிற்கு நான் அடிக்கடி போகும் பழக்கம் உண்டா என்றால் இல்லை. என் சித்தி ரமணி, காயத்ரியின் திருமணத்திற்கு முன்பாக இறந்துவிட்டார் என்றால் சரிதான். ஆஜர் எதிரியும், காயத்ரியும் வார வாரம் என் சித்தப்பா வீட்டிற்கு செல்வார்கள் என்றால் என் சித்தப்பா சொல்லி தெரியும். நான் சம்பவ இடத்திற்கு செல்லும்போது நிறைய போலீஸார்கள் அங்கு இருந்தார்கள், ஊர்காரர்களும் கூடியிருந்தார்கள். முதலில் போலீஸார் காயத்ரி இறந்து கிடந்த இடத்தை சென்று பார்த்தார்களா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. சம்பவ இடத்தில் வைத்து போலீஸார் விசாரித்தார்களா என்றால் இல்லை, காவல்நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள். நாங்கள் காவல்நிலையத்திற்கு போகும் போது இரவு 08.00 மணி இருக்கும். சம்பவத்தை பற்றி சொல்லச்சொல்ல போலீஸார் எழுதிக்கொண்டு என் சித்தப்பாவிடமும், என்னிடம் கையொப்பம் பெற்றனர். காவல் நிலையத்திற்கு எங்களுடன் சொந்தக்காரர்கள் நிறைய பேர் வந்தனர். நான் முதல் விசாரணையில் சொன்னதுபோல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. திருமணம் முதல் இறக்கும் வரை எதிரியும், காயத்ரியும் சந்தோஷமாக தான் குடும்பம் நடத்தினர் என்றால் சரியல்ல. சம்பத்தன்று காயத்ரி இயற்கை மரணம் அடைந்துவிட்டார் என்றும், அந்த சமயத்தில் பால் குடித்துக்கொண்டிருந்தபோது, காயத்ரி மேலே சாய்ந்ததனால், அவரது மகன் மூச்சுத்திணறி இறந்துவிட்டான் என்றால் சரியல்ல. அ.சா.1 என் சித்தப்பா என்பதால் அவர் கேட்டுக் கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நாங்களும், போலீஸாரும் சம்பவ இடத்திற்கு செல்லும்போது எதிரியும், அவரது குடும்பத்தார்களும் அங்கு தான் இருந்தார்கள் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை – இல்லை.</u>